<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 48 /2017 நாள்: 19.02.2026 வா.சா.4 – ராஜசேகர்**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -</u>**

இந்த வழக்கில் சாட்சியம் அழைக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதிகள் ராஜாமணி, கண்ணப்பன் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நானும் வாதிகளும் சேர்ந்து பைனான்ஸ் தொழில் எதுவும் செய்யவில்லை. நானும் வாதிகளும் சேர்ந்து பைனான்ஸ் தொழில் செய்கிறோம், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளிடம் இறந்து போன கே.ஆர். தினேஷ் எப்போது கடன் கேட்டார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட விவரம் நேரடியாக தெரியாது, கேள்வித்தான் பட்டுள்ளேன் என்றால் சரிதான். வாதிகள் யார் மீது வழக்கு போட்டுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சாட்சி தினேஷ் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சாட்சி கூறுகிறார். பிரதிவாதிகள் என்ன பதில் உரை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்ன வியாபாரத்திற்காக மேற்படி தினேஷ் கடன் வாங்கினார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்த போன தினேஷ் எனக்கு நண்பர். தினேஷ் எனக்கு நண்பர் கிடையாது, வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

அடமானப் பத்திரத்தில் தினேஷ் கட்டிடம் கட்டுவதற்கோ, வியாபார அபிவிருத்திக்கோ கடன் வாங்குவதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தினேஷ் கட்டிடம் கட்டுவதற்கோ, வியாபார அபிவிருத்திக்கோ கடன் வாங்குவதாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்படவில்லை நான் வழக்கிற்காக வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2வது வாதி வீட்டிற்கு வந்து தினேஷ் கடன் வாங்கியதாக வாதிகளே வழக்கில் சொல்லவில்லை, நான் அவர்களுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.02.19 17:45:22 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.